1091
9/9

Tamil

2852

3

P

30


Bhagat Singh Kirthanamirutham

Part I.

31

24.2.38

2852
Tamil



V. R. எழுமலைப் பிள்ளை யவர்களால்

தமது ஸ்ரீ எம்பிரான் பிரஸில் பதிப்பித்தது.

ரிஜிஸ்டர்ட்] 8-9-31 [விலை அணா 2

NATIONAL ARCHIVES LIBRARY
No 2852
Date 4.3.72
GOVT. OF INDIA

30

பார்வதியம்பாள் துணை

வந்தேமாதரம்!　　　மகாத்மா காந்திக்கு ஜே!

# சர்தார் பகவத்சிங்

## தேசிய

## சங்கீர்த்தனம்.

கணபதி துதி

சீர்மிகுத்த பாரதத்தாய் சேயர்களாம் இந்தியர்கள்
பேர்மிகுத்த தேசீயப் பேறவா—ஆர்வரித்துச்
சுயராஜ்யங்கோருஞ் சுதேசியச் சீரேறுதக்
கயமாமுகன் கழலே காப்பு

சிறப்புப்பாயிரம்

பதினான்குசீர் ஆசிரியவிருத்தம்

அகில கலை யாகம புராண மிதிகாசமும்
　அயந்திலக்கண விருதியும்
அய்யமறவே கற்றிலங்கிடும்
　மனைவர்க்கு மென்வந்தனம்
சகலகலை கரைகண்ட சர்க்கார்களின்புதுச்
　சட்டங்களைத் தகர்க்கச்
சாத்வீகமாகவே சமருடிடுங் காந்தி
　சற்குணமதைக் குறித்தும்
புகலரிய வீரகெம்பீர பகதூரெனப்
　போர்வீர சர்தாரெனப்
பூமிபுகழும் பகத்சிங்கின் பராக்கிரமம்
　புகலுவோம் சிறிதாகையால்
நிகிலகவி மிகவல்ல நிபுணரனை வோர்களும்
　நேயச் சுதேசியர்களும்
நேர்மையென வெண்ணியே செந்தமிழ்ச்
　சங்கீத நீதியிதனைக் கருதவே.

## பஞ்சாமிர்தா பாலாபிஷேக யோக என்ற மெட்டு

காந்திமகான் காருண்ய ஞான பானு காந்தி
வேந்தற்குயர் வீரன் தீரன் சுகுமாரன் விஞ்ஞானன்
மெஞ்ஞானன் சுஞ்ஞான ஜோதி [காந்திமகான்]
சத்யாக்ரகம்புரிந்த வித்யாப்ரசங்கதுங்க சத்யாக்
அத்யான்மீகச் சுகேந்திர சித்தாய்த் திகழ்ந்துவந்த
நித்யானந்தச் சுதேச வித்தாய் முளைத்தெழுந்த [காந்தி
அஷ்டாங்க யோகபோக மகிபன் சிட்டர்க்கிணங்கு மட்ட
நிஷ்டானுபூதி விண்டநேயன் தூயன் மாயன்
நிஷ்காம்யன் இஷ்டார்த்தன் நிகழ்த்துகின்ற [காந்தி
சட்டம் போட்டிட்ட சென்னபட்ணம் இஷ்டந்தரூத சட்ட
கஷ்டம்போலீஸ்தடியடிகளால்க்காங்ரேஸ்சுயதேஸ்சுயரூஜ்ய
கண்காணத்தென்பான இன்சொற்புகன்ற [காந்தி
அஞ்சா நெஞ்சம் படைத்த இங்லீஷர் ஆக்ஷிசெய்து அஞ்ச
வெஞ்சோர் பஞ்சங்களாகவிட்டார் கெட்டார் கட்டார்
வேண்டோம் வேண்டாம் கெவுர்மெண்டிதென்ற [காந்தி
பஞ்சாப்தேசத்திலவந்த பகவத் சிங்கிற்கிசைந்த பஞ்சா
செஞ்சொல் விளம்புகின்ற சீமான் பூமான் கோமான்
ஜெயமோதி சுயகீதி தரும் பிரக்யாதி [காந்தி
கதிரே கட்டுங்களிந்தியர்களே பதிலோதிடாது கதிரே
எதிராளிகளான வெள்ளையர்களால் இண்டி முஸ்லீம்கள்
இன்னுளும்யென்னுளும் இளையாதேயுமென்றுகந்த [காந்தி
கள்ளைக்குடித்திடாது சொல்லை நம்புங்களென்று கள்ளை
வெள்ளைச்சாமிக்கிசைந்த வேதன் நீதன் போதன்
வேதாந்தன் சித்தாந்தன் விவேகமான [காந்தி

---

### அருசீர்ஆசிரிய விருத்தம்

அவனிதனி லனைவர்களும் அரசாங்கம்
கொடிதெனவே அச்சங் கொண்டே
தவநிதியாம் காந்திமகான் பகர்வதனை
இந்துஜனஞ் சார்ந் துகந்தே

கவனமுடன் சுயராஜ்யங் கொடுங்களெனக்
கொடுத்துதவாக்-கெவுர்மெண்டார்கள்
நவநவமாய் ரூலியற்றி நடத்துகின்ற
ஆக்ஷிமுறை நன்கன்றாமே.

கதர்க் கொடி கப்பல் தோணுதே என்ற மெட்டு.

இராகம்-வசந்தா-தாளம்- ஆதி-

பல்லவி·

பகவத்சிங் கென்னும் வீரரே தேசாபிமானம்
பாரினிற் பிரபல்யமாக வீரத்திரம் வகித்த (பகவத்)

அநுபல்லவி.

இகபர சுகமென்னும் இரண்டிற்கும் இடையிலே
இங்க்லீஷு ராஜ்ஜியமே னென்றே புரக்ஷிசெய்த (பகவத்)

சரணங்கள்.

காந்தி மகான்புகன்ற கருணைப்ரசாரங்களைக்
கண்டான் அதன்படியே கருதிநடந்துகந்தான்
வேந்தனென்றே செங்கோலை யேந்திய ஜார்ஜமன்னன்
வினவுஞ்சட்டசபையில் வெடிகுண்டெறிந்தே வெற்றி
பெற்ற நேயன்— அரு ளூற்றதூயன்
வீராதிவீரனென்றோர்—தீரச்செயல்புரிந்த (பகவத்)

சைமன் கமிஷனரும் ஜஷ்டிஸ்க்காங்ரேசென்போரும்
சதியாலோசனைசெய்த சமயந்தனிலங்குரும்
கைதிமிர் கொண்ட போலீஸ்க் கக்ஷிகலகஞ்செய்தே
கெவுர்மெண்டாரின் தடியால் லஜபதிராயைத்தாக்கக்
கொஞ்சம் நாளில்—உயிர் துஞ்சினாரே யெனக்
கோதைவசந்தாதேவி—யோதும் மொழிக்கிசைந்த (பகவத்)

பற்பலவருஷமாய்ப் பாரிலிங்லீஷர்களால்
பாமரஜனங்களாய்ப் பரதவித்தோமாதலால்
சொற்பகர் காந்திமகான் சொல்லுக்கிசைந்தேசுதேசி

## பஞ்சாமிர்தா பாலாபிஷேக யோக என்ற மெட்டு

காந்திமகான் காருண்ய ஞான பானு காந்தி
வேந்தற்குயர் வீரன் தீரன் சுகுமாரன் விஞ்ஞானன்
மெஞ்ஞானன் சுஞ்ஞான ஜோதி [காந்திமகான்]
சத்யாக்ரகம்புரிந்த வித்யாப்ரசங்கதுங்க சத்யாக்
அத்யான்மீகச் சுகேந்திர சித்தாய்த் திகழ்ந்துவந்த
நித்யானந்தச் சுதேச வித்தாய் முளைத்தெழுந்த [காந்தி
அஷ்டாங்க யோகபோக மகிபன் சிட்டர்க்கிணங்கு மட்ட
நிஷ்டானுபூதி விண்டநேயன் தூயன் மாயன்
நிஷ்காம்யன் இஷ்டார்த்தன் நிகழ்த்துகின்ற [காந்தி
சட்டம் போட்டிட்ட சென்னபட்ணம் இஷ்டந்தரூத சட்ட
கஷ்டம்போலீஸ்தடியடிகளால்க்காங்ரேஸ்சுயதேஸ்சுயரூஜ்ய
கண்காணத்தென்பான இன்சொற்புகன்ற [காந்தி
அஞ்சா நெஞ்சம் படைத்த இங்லீஷர் ஆக்ஷிசெய்து அஞ்ச
வெஞ்சோர் பஞ்சங்களாகவிட்டார் கெட்டார் கட்டார்
வேண்டோம் வேண்டாம் கெவுர்மெண்டிதென்ற [காந்தி
பஞ்சாப்தேசத்திலவந்த பகவத் சிங்கிற்கிசைந்த பஞ்சா
செஞ்சொல் விளம்புகின்ற சீமான் பூமான் கோமான்
ஜெயமோதி சுயநீதி தரும் பிரக்யாதி [காந்தி
கதிரே கட்டுங்களிந்தியர்களே பதிலோ திடாது கதிரே
எதிராளிகளான வெள்ளையர்களால் இண்டி முஸ்லீம்கள்
இன்னுளும்யென்னுளும் இளையாதேயுமென்றுகந்த [காந்தி
கள்ளைக்குடித்திடாது சொல்லை நம்புங்களென்று கள்ளை
வெள்ளைச்சாமிக்கிசைந்த வேதன் நீதன் போதன்
வேதாந்தன் சித்தாந்தன் விவேகமான [காந்தி

---

### அருசீர்ஆசிரிய விருத்தம்

அவனிதனி லனைவர்களும் அரசாங்கம்
கொடிதெனவே அச்சங் கொண்டே
தவநிதியாம் காந்திமகான் பகர்வதனை
இந்துஜனஞ் சார்ந் துகந்தே

கவனமுடன் சுயராஜ்யங் கொடுங்களெ-னக்
கொடுத்துதவாக்-கெவுர்மெண்டார்கள்
நவநவமாய் ரூலியற்றி நடத்துகின்ற
ஆக்ஷிமுறை நன்கன்றுமே.

கதர்க் கொடி கப்பல் தோணுதே என்ற மெட்டு.

இராகம்-வசந்தா-தாளம்- ஆதி-

பல்லவி

பகவத்சிங் கென்னும் வீரரே தேசாபிமானம்
பாரினிற் பிரபல்யமாக வீரத்திரம் வகித்த (பகவத்)

அநுபல்லவி.

இகபர சுகமென்னும் இரண்டிற்கும் இடையிலே
இங்க்லீஷர் ராஜ்ஜியமே னென்றே புரக்ஷிசெய்த (பகவத்)

சரணங்கள்.

காந்தி மகான்புகன்ற கருணைப்ரசாரங்களைக்
கண்டான் அதன்படியே கருதிநடந்துகந்தான்
வேந்தனென்றே செங்கோலை யேந்திய ஜார்ஜ்மன்னன்
வினவுஞ்சட்டசபையில் வெடிகுண்டெறிந்தே வெற்றி
பெற்ற நேயன்— அரு ளூற்றதூயன்
வீராதிவீரனென்றோர்—தீரச்செயல்புரிந்த (பகவத்)

சைமன் கமிஷனரும் ஜஷ்டிஸ்க்காங்ரேசென்போரும்
சதியாலோசனைசெய்த சமயந்தனிலங்குரும்
கைதிமிர் கொண்ட போலீஸ்க் கக்ஷிகலகஞ்செய்தே
கெவுர்மெண்டாரின் தடியால் லஜபதிராயைத்தாக்கக்
கொஞ்சம் நாளில்—உயிர் துஞ்சினாரே யெனக்
கோதைவசந்தாதேவி—யோதும் மொழிக்கிசைந்த (பகவத்)

பற்பலவருஷமாய்ப் பாரிலிங்லீஷர்களால்
பாமரஜனங்களாய்ப் பரதவித்தோமாதலால்
சொற்பகர் காந்திமகான் சொல்லுக்கிசைந்தேசுதேஸ்

சுயராஜ்யந்தாலன்றிச் சுயமறியாதையுறோம்
சொல்லுவீரே—பதில் விள்ளுவீரே
துரைமார்கள்சட்டம்வேண்டாம்-ஸ்திரமாயிதென்றேபகர்
தேசிகஸ்வாமிகளின் செந்தமிழ் தெரிந்துணர்
சீலன் வெள்ளைச்சாமியின் செங்கலைக்கிசைந்தவன்
காசினியிலெவரும் கண்யனெனப்பகரும்
கர்ணனுவுதாரன் காங்ரேஸ்க் கக்ஷியபேக்ஷகனுய்க்
காதலானேன் தூக்கில்ச் சாதலானுன் இதைக்
கண்ட இந்துக்களெல்லாம்—அலங்கும் படிக்கிறந்த [பகவத்]

ஷண்முகா யேழை யென்மேல் யென்றது போன்ற

பல்லவி.

பகவத் சிங்கே நல்வீரன் பார்தனிலே பார்லிமெண்
டாரே ரூல்சீரே சரிகேரே இயற்றுததாலிப்பார் தனிலே(பக)

(மகுடங்கள்)

பண்டைப்படி நிகழ்ந்திடவெடி
குண்டையடித்தார் டில்லிச் சபையினிலே (பகவத்)
பிரிட்டிஷார் தடியடிகளைக் கவனித்தார்—பின்னும்
பிரமித்திடும் வரிவகைகளை யோசித்தார்—இன்னும்
ஜஸ்டிஸ் காங்ரேஸ் வினவுதலுங் கற்றூர்—இங்கிலீஷ்
கெவுர்மெண்டின் ரூலிற்சில தர்க்கித்தார்—வெகு
கெம்பீரன் சிங்காரன் கௌமாரன் கீர்த்தியுடன்
கிருஷ்ணசிங்கரின் தவத்தினிற் பிறந்துகங் திறந்த (பகவத்)
பாரத மாதா வுதார—தீரகுணம் பரவியவன்—பகவத்சிங்

சரணங்கள்

இங்கிலீசரூச்கியினுல் இந்தியநேயர்களாகிய மன்னர்கள்
யெல்லவருங் கஷ்டமுற்றேம்
இன்னம் வருந்தவொண்ணுததி னுலுயிர்
பின்னமானுலும் பெரிதல்ல வென்றெண்ணிப்
பின்பிங்கவரின் பம்பெற அன்பும் பண்பும் பரவிய (பகவத்)

2852

| ाह्वानांक<br>'all No.) | अवाप्ति<br>(Accn. No.) |
|---|---|

थक
thor ..Tamil...Poos..Pns..........

र्षक
le ..........................................

..........................................

| कास्की तिथि<br>Issued on | लेने वाले के हस्ताक्षर<br>Borrower's Signature | वापसी तिथि<br>Returned on |
|---|---|---|
| .18/98. | [signature] | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

1 No. N. A. I-31

| निकासी तिथि<br>Issued on | लेने वाले के हस्ताक्षर<br>Borrower's Signature | वापसी तिथि<br>Returned o |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

राष्ट्रीय अभिलेखागार ग्रंथालय, नई दिल्ली।
National Archives Library, New Delhi.
प्रभासमु मिरोड नई दिल्ली—1 एन०ए०—12-6-93—20

கதிர்வேஷ்டி கட்டுமென்றே காந்திமகான் சொன்ன சாந்த
விசாரணை கண்டே மனதுட்கொண்டே
கள்ளுச்சாராயக் கடைவரி வாங்கிய
வெள்ளைக்காரத் துரைமார்களைத் தாக்கிய
கருணைத்திரு புவியினிலொரு அரிய திருச்செயலெய்திய(பக)

அரசியல்ப் பரிசீலமே அன்றுசைமன்கமஷன் சபையோசனை
யால் நடந்த தடியடியால்
அன்பன் லஜபதிரா யிறந்தாரென்றே
அன்னைவசந்தா விளம்பும் பிரசாரத்தை
அனைவர்களுங் கேட்கயிவர் வினவியதைச்செய்தமையால்(ப)

வேலைய தேசிகரின் மெய்த்திர வக்கணையைப் பகர் வித்தகன்
வெள்ளையச்சாமி யென்பான்
வினவிய தமிழ்க்கித மிதைத்ததி
மனதினிற் பதிவாக வுணர்ந்திடும்
இந்திய தேசத்தினரே அந்தமிகுஞ் சுந்தரனும் (பகவத்)

## அடுக்குமல்லிகை தொடுக்கு மெத்தையிலே என்ற மெட்டு.

### கண்ணிகள்.

பகவத்சிங்கினைத் தூக்கிடத்தகுமோ—பாவியிங்கிலீஷார்
பயப்படுத்திய ஆக்ஷியின் திரமோ இந்தப்
பாரினிற்றில ரூலமிட்டிடச்
சீரிய பிரிட் டீச ரிங்கணம்(பக)

சுகமிகுஞ் சுகதேவர்ருஜகுரு சுகுணப் ரதாபச்
சோதர ரிவர் மூவர்களுயிரும் மிகத்
துடி துடித்திட மனம் பதைத்திடக்
கடுகடுத்திடுங் கெவுர்மெண்டார்கள் [ப]

ஜெயிலிலெத்தனை நபர்களை யடைத்தார் தீவாந்ரசிக்ஷைக்கு
செய்ததெத்தனையிதை யெவர்கேட்டார் இனிச்

சீமைவெள்ளைய ருக்ஷிபோதும்
தேசமக்களுக் கேதிவ்வாது (பக]

சுயநலமதையேன் தரமாட்டார் துப்பாக்கி தூக்கித்
துரைத்தனம் புரிந்திடும் வெளிநாட்டார் நமது
சொந்தமென்ற சுதேசரெவரு
மிந்திய சுய ருச்யங்கோரும் (பக)

துணிமறியலைச் செயதிடத்துணிவோம் மகாத்மா காந்தி
சொன்னசொற்களை முழுவது முணர்வோம் மிகு
துஷ்டமிருக பலம்படைத்திடும்
பிரிட்டீஷ் சக்ர வர்த்தி யென்பர் (பக)

குடிகளிடத்தில்சமர் புரிவாரோ கோவேந்த ரெவருங்
குவலயந்தனிலியற்றிய சீரோ இதைக்
கொஞ்சமஞ்சலி செய்துகேளும்
பஞ்சாப்தேசப் பால்யனென்றிடும் (பக)

வேலையகுருதேசிகஸ்வாமி விஞ்ஞானபோதம்
விளம்பிய தமிழுணர்ந்திடுமநேமி எஸ்' கே.
வெள்ளைச்சாமி விகசிதமெனத்
தெள்ளு செந்தமிழ்ச் சீரிசைதரும் (பக]

## காக்ஷிகண் காக்ஷியே யென்ற வர்ணமெட்டு

### பல்லவி.

காங்ரேஸ் விசாரணை காணுமிங்கிதன் தோரணை [காங்]

### மகுடங்கள்.

கதிர்வெற்றிக் கொடி கட்டிப் பிரிட்டீஷ்
கலங்கிடும் படிவொற்றுமை காட்டிய [காங்]

கனத்தவர்களு மிகவிகசிதமொடு
புகலத்தகுமிப் புவியிற் பரவிய
கற்பிதமொப்ப மகிழ்ச்சி பொருந்திய
கற்கி மகாரிஷியார் தபோபலங் காங்

காருண்யக்கெவர் மெண்ட்டாரெனவொரு
பேருண்டுங்கொலை பாதகரெனவெதிர் [காங்]

கண்டவர்க ளின்பமிகத் தண்டமிழ் மக்கட்கினிய [காங்]

சரணங்கள்.

கள்ளுச்சாராயக் கடைகளை மறியல்ச்செய்தனர்
காசினியிற் சீமைவர்த்தகம் மறியல்ச்செய்தனர்
வெள்ளையர்க ளுப்புவரியை மறியல்ச்செய்தனர்
வேண்டி பருத்திவகையும் மறியல்ச்செய்தனர்
வெடிவிடுகின்ற துருப்புச்சேனைகள் வேண்டாமாம் இங்கண்
வெளிநாட்டிங்லீஷ்காரர் சட்டம்வேண்டாமாம் இந்தப்
படியிற் பற்பலவரிகள் வசூலும் வேண்டாமாம் இங்கிலீஷ்]

பார்லிமெண்டும் போலீஸ்க்கோர்ட்டு வேண்டுமோ
பகிஷ்கரிக்க வேண்டும் பார்செழிக்க வேண்டும்
மிகச்சிறக்கத் தூண்டும் மேன்மையென மீண்டுங் [காங்]

எத்தனையோ ஆயிரம் ஜனங்கள் ஜெயில்ச்சேர்ந்தனர்
இந்தப்போலீஸ் கைத்தடியடியிற்சிலர் மாய்ந்தனர்
வர்த்தகம் மறுத்தவர்கள் மண்டைகளுடைந்தனர்
மற்றுமுள்ள மாந்தர்களும் வாதுசெய்து மீண்டனர்
மண்மிசைவருமொரு காந்திமகாத்மா வாய்க்யமாம் வீரேம்
மண்டலமெங்கினிலும் புகழ்கின்ற சிலாக்யாமாம் இந்தப்
பெண்களு மாண்களுமாக நிறைந்தருள் பாக்யமாம் இந்தப்
பிரிட்டிஷ் வெள்ளையராக்ஷி மறுப்பது யோக்யமாம்
பேச்சிதனைக் கேளும் பிரபுக்களெந்தநாளும்
மாக்ஷியுடன்வாழும் மனுமுறைகள் சூழும் [காங்]

பூமியெங்கினும் புகழும் புண்ணியர்கள் வாழ்கவே
பூவையர்கள் கற்புநிலையுஞ் சிறந்து வாழ்கவே
வாமியபிரும் வீரபாரதியும் வாழ்கவே
மன்னவர் புகழ்ந்திடும் மகாத்மா காந்தி வாழ்கவே
வாழ்த்திய வெள்ளைச்சாமி தமிழ்பத மோதுவோம் இங்கே
வம்பு புரிந்திட வந்தவருக்ஷியை மீறுவோம் காந்தி
தோத்திரமே ஜெயமென்று சுயாக்ஷி சேறுவோம் இதனைச்
சுதேச மஙபர்களெவரும் பயிலக்கூருவோம்
சுகிர்த கலைவணி செல்விதனைத்யானி
இகமகிதம்பேணி இசைந்திலகும்ஞானி (காங்)

## இந்துநேச வங்கதேச என்ற மெட்டு

### பல்லவி.

சிங்கமென்றே வந்த பகவத் சிங்கினை யிழந்தனம்
தேசமக்கள் நாமெல்லோருஞ் சேர்ந்து கண்டிருந்தனம்
இங்கிலீசருக்ஷியா லிதந் தளர்ந்த யிந்தினம்
இன்னமெந்த நாளிலோ சுயநலங் கைகொள்ளுமோம்
இன்பமென்றுருவோம் யீசன்
அன்பிதம் பெருவோம் நீச
அரசியல் மறுப்போம் நமது
இந்தியா சுயாச்சியோங்க யிடலாத வீர தீர (சிங்க)

### தோகையரு.

காந்திமகான் செய்துவரும் வெளிநாட்டுத் துணிமறியல்
வுப்பு மறுப்பெனும் ஞாயந்தனையுட் கொண்டே
சாந்தமுடன் பிரசாரங்களைப் புகன்றார் சர்க்காரின்
சட்டமதிகரித்ததினுர்ச் சினமடைந்தோன் தானங்கேகி

வேந்தனெனப் பெயர்வகித்த ஜார்ஜுமன்னன் கருதாமல்
பார்லிமெண்டார் யோசனையால் விளம்புஞ் சட்டம்
சார்ந்த டில்லிச் சபைதனிலே இந்திய சேனாதிபன்போல்
வெடிகுண்டை விட்டெறிந்த சமர்த்தனன்றோ
[எடுப்பு] சத்யாக்ரகம்புரிந்த சித்தனென்று பேர்வகிந்த (சிங்க

தொகையறு.

பூவுலகிலனைவர்களும் புண்ணியவான் காந்திமகான் முதலெவருமின்னவனைக் சொல்லாதீரென்று பல தந்திகளுஞ்செய்திகளும் புகன்றாரல்லால்க்
கோலின்முறைபோன்றிவரைத் தீவாந்திரசிக்ஷை செய்தாலெங்களுக்கு சம்மதந் தானெனப் பலரும் புகல்வதையுங் கேட்டுணராக் கொடுங்கோலார் குறித்தவாரே
தேவதைகள் போன்றுகந்த சுகதேவர் ராஜகுரு பகவத்சிங்கெனு
மூவருயிரையும் வீண்செயலாலே தூக்கிப்போக்குஞ் சீமை
வெள்ளைப்பாவியர்கள் அரசாங்கநீதிபிதைச்ஜெகந்தாங்காதாம்
நாமவர்கட் கடங்கி யின்னுமெத்தனைநாள் சகித்திருப்போம்
நாட்டின்சாரம் நம்மதென்றே நாம்தொடங்கிச் சமர்புரியச்
சொல்வதுபோல் நமக்குஞ் சொன்னார்
[எடுப்பு] ஞானவானெனச் சிறந்த மானப்ரதாபவீர (சிங்க)

தொகையறு.

இருநூற்றிஇரண்டுபத்துநான்கு புவனங்களையு மேக
சக்ராதிபதியாய் இராவணன் யென்றவொரு ராக்கத
பலாஷ்டிகள்இவ்வுலகை யாளவிலையோ

அருள்மூர்த்திவடிவான ஸ்ரீராம லக்ஷ்மணர்கள் அவனையு
மவன் படைகளாம் அடல்மிகுஞ் சூரரைக் கொன்றார்க
ளென்றிடும் ஆரணக்கேழ்க விலேயோ
திருமூர்த்தியாய்வந்த காந்தியார் வரய்மையால்ச் ஜெக
மெலாஞ் சேறுமன்றோ தேவரேவானரர்களாய் வந்து
முன்செய்த செய்கை இந்தியர்களன்றோ
பரமார்த்தமாகவே பகருவோம் வெள்ளையர்கள் பரிகசிக்
கின்றதன்றோ பாரெலாம் நிலவரிகள் வூரெலாம்
ஜலவரிகள் வனமெலாங் கிஸ்தியெனவே

[எடுப்பு]

பண்புடன்வசூல்புரிந்த-இங்கிலீஷரைச்சினந்த சிங்க
தொகையரு

மண்ணுண்ட மகிபரெல்லாம் மன்னுயிரைத் தன்னுயிர்போல்
மனதுட்கொண்டே மனுமுறையைத் தவறாமல்
அரசாக்ஷி புரிவது சன்மார்க்கமன்றோ
தன்னுண்ட சக்தியினால் சாத்வீகப் போர்புரிந்த
மகாத்மா காந்தி தமைக்கருதுமிந்தியர்கள்
சுயராஜ்யம்பெருவதற்கே தவமியற்றி
வுண்ணாவிரதமுருங் காந்திமகான் தபோபலத்தா
லுலகத்தார்கள் வொற்றுமையாய் வாழ்ந்திடவே
வழிகாட்டி போன்றுகந்த வுதவியன்றே

விண்ணாண்ட இந்திராதி தேவர்களும் முனிவர்களும்
விண்டார்போலும் வெள்ளையச்சாமி தமிழ்கீதமிதை
விரித்துரைத்தான் வினவிக்கேண்மோ

(எடுப்பு)

விக்ரமப்ரசித்திபெற்ற வுக்ரசக்தியிற் சிறந்த சிங்க

அற்புதப் புதுமையான ரப்பர் தோட்டம்
என்ற மெட்டு

கண்ணிகள்.

பகவத்சிங் பஹதூர் சர்தாரிவர் பஞ்சாப்தேசத்தார்—இந்தப்
பாரிற் பரவிய இந்திய நேயர்கள் பகர்தருமின்பத்தார்
சுகசற்குணமிகு கிருஷ்ணசிங்கின் சுதனென வந்துற்றார்—
[இங்கண்

தோன்றிய காங்ரேஸ் கக்ஷியினற்புத தோரணை கற்பித்தார்
தூயமனோலயதீரன்—சுயநல ஞாயவிவே கவுதாரன்—பற்பல
தேயர்களும்புகழ்வீரன்—சிப்பிய ஜாதியில்வந்தே தோன்றிய
[—குமரன்

செங்கலைமங்கைநிதம்புகழ் துதி ஜேஜேஜே யெனவும்(பகவத்

ரூஜகுருச்சுகதேவரிவர்க் கினிதாகியதோர் நண்பர்—லாலா
லஜபதிராயின்மரணங்கண்டே நண்புமிகுந்தொண்டர்—இந்து
நேயர்களுக்கிதையுபதேசித்தே நெஞ்சுதிடம் பூண்டார்-
[டில்லியில்

நிகழுஞ்சட்டசபைக்குட் சென்றேநேரில் வெடிவிட்டார்
நித்திய நிஷ்களமாரன்—வெகுவித புத்திமிகுத்த குபேரன்
[மகிதல
பக்தரிதத்துயர் சீரன்-தமையே நத்தியவர்க் குபகாரன்-நற்கலை
பாவலர் நாவலர்பூவினிலெவருஞ் ஜே ஜே ஜே யென்றிட
[பகவத்

மிகவுக்ரமமொடு சட்டமறுப்பின் வெற்றியைவிளைவித்தார்—
[இந்திய
வேந்தர்களெவரும்சுயராஜ்யம்பெற வீரப்பலியுற்றார்
தகமைப் புலவர்களாசீர்வாதஞ் சாற்றுஞ்சீர்பெற்றார்—
[இன்னவர்

சத்தியமேஜெயமென்று புகன்றுயர் சாஸ்த்திரமுங்கற்றார்
தக்கவர்மெச்சியபூபன்—விக்ரமசித்தர்கினியசினேகன்-சிற்பர
வித்தைகளிற் பிரதாபன்—அத்வித சத்தியசற்குண மகிபன்
விகசித
விந்தைபொருந்திய இந்தியறெவரும் ஜே ஜே ஜே யென்றிட
[பகவத்

காந்திமகாத்மாவின்பிரசாரங்களையுங்கவனித்தார் இங்கிலீஷ்
கக்ஷியபேக்ஷகருகியபலரும் கலங்கிடச் சொற்றார்-சாந்தத்
வேந்தர்களெவரும் வீரனெனப்பகர்வீரம்பயில்வித்தார்-ஸ்ரீமத்
வேலையதேசிகர்மாணவன் எஸ். கே. வெள்ளைச்சாதமிழ்
விமரிசையாகவினுவும்-அன்பினர் சமரசமாக நிலாவும்
[பண்பாம்

அகில சருசரமேவுங்-கடவுள் அருமைத் திருவருளின்பம்
[பரவிய

அற்புத விற்பன மெய்த்தவறெவரும் ஜே ஜே ஜே யெனவும்
[பகவத்

---

## கந்தா காருண்யனே யென்றமெட்டு

### பல்லவி.

அந்தோ ஆச்சர்யமே அணியாயமிதே	அந்தோ
ஆ கா பகவத்சிங்கை தூக்கிலேற்றியதே	அந்தோ

### அநுபல்லவி.

ஆரணம் புகழ் காரணன்
மகாத்மா காந்தி மனோலயன்
மகாத்மா காந்தி மனோலயன்
மனுதர்ம ஞான சுபோதயன்

### எடுப்பு

மன்னர் மன்னவர் போன்றுறுயர் வல்லவனும் அந்தோ

### தொகையறு.

சீப்பியர்கள் ஜாதியில்லாத் திலகமென வந்தருள்
திவ்ய சுகு மார தீரன்

கார்க்கும்ர சாக்ஷியின் கபடங்களைக் கண்டு
கடுங்கோப முற்ற மகிபன்
கையில் வெடி பிடித்தே
கெவுர்னரை யடித்தான் அந்தோ

தொகையறா.

இந்தியா வென்கினும் இங்லீசார் ரூக்ஷியே
யென்று முண்டென்று போலீஸ்
முந்தியும் பிந்தியும் யோசித்திணங் காது
மூக்கத்துடன் முரண்டே

எடுப்பு

முற்றும் மோச மன்றோ
பிரிட்டிஸ் வேஷ மன்றோ அந்தோ

தொகையறா

ஜெயிலினிற் சேர்க்கவும் தீவாந்ர சிக்ஷைகள்
செய்யவும் தூக்கிலிடவும்
பையரவின் வாய்ப்பட்ட தேரைபோலிந்தியர்
பதுங்கிப் பணிந்துலவவும்

எடுப்பு

பயங் காட்டுகின்றார்
நய மோட்டுகின்றார் அந்தோ

## வாழி விருத்தம்

பாரத மாதா வாழ்கப் பண்ண வரயன்மால் வாழ்கச்
சீரதாய்ச் சிறந்த இந்துதேசியத் தொண்டர் வாழ்க
ஆரணவேதமாதியாகம மனைத்தும் வாழ்கக்
காரணம் மகாத்மாகாந்தி காங்கிரேஸ் வாழ்க வாழி

---

இப்புத்தகமும் இன்னுமதி நூதன சிந்து, கும்மி, விருத்தம், டிராமா, இன்னும் தங்கட்கு வேண்டிய புத்தகங்கட்கு குறித்து எழுதினல் ஆர்டர் பிரகாரம் அனுப்பப்படும். புத்தகம் வேண்டுவோர் நேரிலும், வி. பி. மூலியமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

---

எமது விலாசம்:—V. R. ஏழுமலைப்பிள்ளை,


189, வால்டாக்ஸ் ரோட், செளகார்பேட்டை, மதராஸ்.

**ஆச்சரியம்!　　அற்புதம்!!　　அதி விநோத　　ம்!**

**வெகுநயம்!　குறைந்த விலை!!　வெகு நயம்!!!**

## விசித்திர பட்டைகள் தீர்த்த நிக்கல்

# ரிஸ்லெட் கெடியாரம்.




இக்கெடியாரத்தில் மேற்புறம் சுற்றியுள்ள பிசிலின்மேல் பார்ப்பவர்கள் ஆச்சரியப் படக் கூடிய பல மாதிரியான விசித்திர பட்டைகள் தீர்த்த வேலைகள் செய்தது. ஜெர்மனி தேசத்திலிருந்து வரவழைக்கப்பட்டது. இதன் பெருமை வாங்குபவர்களுக்குத் தான் தெரியும். இதைப்பார்க்கும் ஒவ்வொருவரும் இதை வாங்காம லிருக்கமாட்டார்கள். சரியான காலம் காட்டுவதுடன் நெடுங்காலம் போகக்கூடியது

| | | | |
|---|---|---|---|
| நெ. 1. விசித்திர பட்டைகள் தீர்த்த நிக்கல் ரிஸ்லெட் கெடியாரம் விலை ரூபா | 5 | 0 | 0 |
| நெ. 2. மேற்படி மாதிரி பொன்கில்ட் கெடியாரம் | 5 | 8 | 0 |
| நெ. 3 அசல் சொக்கவெள்ளி கெடியாரம் | 7 | 0 | 0 |
| நெ. 4. ஐந்துவருஷம் காரண்டியுள்ள ரோல்கோல்ட் | 7 | 8 | 0 |

மேற்படி கெடியாரங்களில் இரவில் மணி பார்க்கும் ரேடியம் டயல் வேண்டுமானால் எட்டணா அதிகமாகும். எந்த கெடியாரம் வாங்கினாலும் 1 தோல்பட்டை இனாம்.

## மயிர் போக்கும் சோப்

இது ஒவ்வொருவருக்கும் மி·வும் அத்தியாவசியமானது. சரீரத்தின் எந்தபாகத்திலுமுள்ள மயிரை இந்த சோப்பின் உதவியால் பிரயாசையின்றி அதிக சுலபமாய் போக்கிவிடலாம். மயிரைப் போக்கவேண்டிய இடத்தில் கொஞ்சம் ஜலத்தைப் பூசி அதன்மேல் இந்த சோப்பைத் தேய்த்து ஐந்து நிமிஷம் கழித்து காகித கார்டினாலாவது ஓலைத்துண்டினாலாவது வழித்தால் அவ்விடத்திலுள்ள மயிர்யாவும் கழிந்துபோகும். அந்த இடம் பிறகு மழமழப்பாக இருக்கும் இந்த சோப்பில் துற்நாற்றம் முதலியவை இராது.

| | | | |
|---|---|---|---|
| 3 சோப் கொண்ட பாக்கெட் 1-க்கு ரூபா. | 1 | 0 | 0 |

---

**எமது விலாசம்:—V. R. ஏழுமலைப் பிள்ளை,**

**189, வால்டாக்ஸ் ரோட், சௌகார்பேட்டை போஸ்டு, மதரூஸ்.**

518/98
Exhibit
26 AUG 2006
Supreme Court

## கொக்கோகம் கொக்கோகம் என்று

நீங்கள் அநேக நாட்களாக தேடிக்காணுமற்போன நூல்.

பார்த்தீர்களா? இரகசிய நூல் படித்தீர்களா?

ஏராளமான பணச்செலவில் பெருமுயற்சியுடன் தயார்செய்தது

வெளிவந்துவிட்டது! 2-ம் பதிப்பு. வெளிவந்துவிட்டது!!

# ஆண்பெண் மர்ம இரகசியங்கள்.

சென்னை ஸ்ரீமாந், V.R. ஏழுமலைப் பிள்ளையவர்களால் பதிப்பிக்கப் பெற்ற இம்மாண்புமிக்க நூலில் ஸ்திரீ புருஷ இலக்ஷணங்களும், அவர்களது மர்ம ஸ்தானங்களின் அமைப்பும், சம்போகஞ் செய்யவேண்டிய காலக்கிரமங்களும், பெண்களைப் புருடர்கள் வசியப்படுத்த வேண்டிய வழிகளும், புருடர்களைப் பெண்கள் வசியப்படுத்த வேண்டிய வழிகளும், விரும்பியவண்ணம் மக்களைப் பெறும்மார்க்கங்களும் ஆண்மலடு



பெண்மலடு அறியும் விவரமும், அதற்குப் பரிகாரமும், காமம் எப்படி உண்டாகிறதென்பதும், இன்னும் இது போன்ற அநேக மர்மங்களை மிகத்தெளிவாகவும், விரிவாகவும் காணலாம். கலியாணமான ஆண்பெண்களுக்கும் கலியாணமாகாத சிறுவர் சிறுமியர் களுக்கும் இந்நூல் சிறந்த நீதிப்பொக்கிஷமாகும். படங்களுடன் கூடியது. புத்தகம் 1-க்கு தபாற் சிலவுடன் ரூ. 1-5-0

---

# கிரம்போன் சங்கீதக் களஞ்சியம்.

8 பாகங்கள் சேர்ந்த கட்டடம் விலை அணு 0-12-0

## ஜெகமெங்கும் புகழ்பெற்ற ஜெயலக்ஷிமி

## கூந்தல் வளரும் பரிமளத் தைலம்.

இத்தைலம் சாஸ்திர முறைப்படி தயார்செய்யப்பட்டது. இதன் மணம் அன்று மலர்ந்த மல்லிகை புஷ்பத்திற்கு சமானமாயிருப்பதுமன்றி மூளைக்கொதிப்பு மண்டைகுத்தல் தலைச்சுண்டு, புண், மயிர் வெடிப்பு, மயக்கத்தினால் தலைச்சுற்றல், சொரி சிரங்கு முதலிய நோய்களை யொழித்து கண்களுக்குக குளிர்ச்சியையும் மனத்திற்கு உற்சாகத்தையும் தரவல்லது.

5 பலம் தைலம் டின் 1 க்கு தபாற் சிலவுடன் ரூபா 1-6-0

---

எமது விலாசம்:—**இராம் அண்டு கம்பெனி,**

**189, வால்டாக்ஸ் ரோட், சௌகார்பேட்டை, மதராஸ்.**